ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1887/39 - 2014 නොවැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2014.11.07

*1887/39 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 277/40*

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டம்**

33 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி திசாநாயக்க முதியான்செலாகே செனரத் பண்டார திசாநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளது எனத் திருப்திப்படுவதன் பேரில் இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணி இடப்பரப்பு, மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ''புதைபொருளியல் ஒதுக்கிடம்'' ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

செனரத் திசாநாயக்க,
புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு,
2014, நவெம்பர் 05.

அட்டவணை

**வில்கம் வெஹர சோமாவதி ரஜமஹா விகாரை**

புதைபொருளியல் ஒதுக்கிடத்தை உள்ளடக்கிய இடப்பரப்பு

கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை மாவட்டத்தில், சேருவில பிரதேசச் செயலாளர் பிரிவின், சேருவில கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 49 ஏக்கர்கள், 3 றூட்டுகள் மற்றும் 21 பேர்ச்சுக்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதும் இடக்கிடப்பியல் முதனிலை வரைபட இலக்கம் 22 இல் உள்ள இறுதிக் கிராம வரைபடத்தில் துண்டு இலக்கம் 415 (உள் வரைபடம் இல. 29) எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான வில்கம் வெஹர சோமாவதி ரஜமகா விஹாரை புதைபொருளியல் இடம் என அழைக்கப்படும் காணியின் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டம் முழுவதும்.

11-602

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.